# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 35/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4(LW 1) |
| Name : | மாதேஸ்வரன் |
| Father's/Husband Name: | சுந்தரம் |
| Village : | காட்டுகொட்டகை |
| Taluk : | ஆத்தூர் |
| Age : | 53 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.02.2026

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) கடந்த 27.11.2023 ம் தேதியன்று நானும் எனது மனைவி ஜெயலட்சுமி என்பவரும் வீட்டை பூட்டிவிட்டு 07.00 மணிக்கு புறப்பட்டு காட்டுக்கு சென்று வெண்டிக்காய் அறுத்து கொண்டு காலை 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம் அப்போது பூட்டியிருந்த வீடு திறக்கப்பட்டு இருந்தது. வீட்டின் வெளியே இருசக்கர வாகனம் இருந்தது வீட்டினுள் இருந்து ஆஜர் எதிரி வெளியே வந்தார். எதிரியை பிடித்து சத்தம்போட்டு யார் என்று கேட்டபோது நான் உள்ளூர்தான் என்றும் தான் தண்ணீர் குடிக்க வந்ததாக சொல்லி தப்பித்து ஓட முற்பட்டவரை நானும் பக்கத்து காட்டை சேர்ந்த நபர்களும் சேர்ந்து எதிரியை பிடித்து காவல் நிலையம் கொண்டுவந்து அவரை ஒப்படைத்து புகார் ஒன்று கொடுத்தேன். எதிரி ஓட்டி வந்த வாகனத்தையும் போலிசாரிடம் ஒப்படைத்தேன். எதிரி வீட்டினுள் திருட முயற்சி செய்து வீட்டின் பிரோவை திறந்து பார்த்துள்ளார் அதில் துணிகள் தான் இருந்தது. திருட்டு முயற்சி வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்து அதன்பேரில் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3(i) எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக அவர் மீது பொய்புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 35/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 (LW 4) |
| Name : | மணிவேல் |
| Father's/Husband Name: | ராமசாமி |
| Village : | பெரியவடகரை |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 40 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.02.2026

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது பெரியவடகரையில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 27.11.2023ம் தேதியன்று அ.சா.1 மற்றும் அவரது மனைவி ஜெயலட்சுமி என்பவரும் வீட்டை பூட்டிவிட்டு 07.00 மணிக்கு புறப்பட்டு காட்டுக்கு சென்று வெண்டிக்காய் அறுத்து கொண்டு காலை 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்தார்கள் அப்போது பூட்டியிருந்த வீடு திறக்கப்பட்டு இருந்தது. வீட்டின் வெளியே இருசக்கர வாகனம் இருந்தது வீட்டினுள் இருந்து ஆஜர் எதிரி வெளியே ஓடி வந்தார். எதிரியை அ.சா.1 பிடித்து சத்தம்போட்டு யார் என்று கேட்டபோது நான் உள்ளூர்தான் என்றும் தான் தண்ணீர் குடிக்க வந்ததாக சொல்லி தப்பித்து ஓட முற்பட்டவரை அ.சா.1 சத்தம் போட்டு கத்தியதன் பேரில் நானும் ஊர்காரர்களும் சேர்ந்து எதிரியை பிடித்து காவல் நிலையம் கொண்டுவந்து அவரை ஒப்படைத்து புகார் ஒன்றினை அ.சா.1 கொடுத்தார். எதிரி அ.சா.1ன் வீட்டில் திருட முயற்சித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3(i) எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக அவர் மீது பொய்புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 35/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 (LW 6) |
| Name : | ரத்தினம் |
| Father's/Husband Name: | பூமாலை |
| Village : | பெரியவடகரை |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 57 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.02.2026

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது பெரியவடகரையில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அதனை கடந்த 2023ம் வருடத்தில் ஒருநாள் இவ்வழக்கு சம்பவ இடத்தில் போலிசார் விசாரித்து பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். பார்வைமகஜரில் நான் இரண்டாவதாக கையெழுத்து செய்தேன். கையெழுத்து செய்த மாதம் தேதி எனக்கு நினைவில்லை. சோலைமுத்து என்பவர் முதலாவதாக கையெழுத்து செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3(i) வழக்கு சம்பவம் குறித்து போலிசார் விசாரணை செய்து பார்வைமகஜர் மாதிரிவரைபடம் சம்பவ இடத்தில் தயார் செய்தபோது பார்வைமகஜரில் முதல் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.